

சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் செயல்படும் மிகப்பிற்படுத்தப் பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி கட்டடத்தின் ஒரு பகுதியாக செயல்படவுள்ள புதிய சிறுபான்மையினர் நல கல்லூரி மாணவர் விடுதியினை நேற்று (16.04.2025) அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், ஆவடி சா.மு. நாசர் ஆகியோர் திறந்து வைத்தனர். உடன் சிறுபான்மையினர் நல இயக்ககம் ஆணையர் திருமதி.மு.அசியா மரியம், சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ரஷ்மி சித்தார்த் ஜகடே. ஆகியோர் உள்ளனர்



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், இலத்தூர் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் செய்யூர் மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையிலும் ஒன்றிய செயலாளர் எம். எஸ். பாபு வரவேற்பிலும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. ஆகியோர் நல உதவிகள் வழங்கி சிறப்புரை ஆற்றினர். இளம் பேச்சாளர் சூர்யா மகள் ஆண்டாள் பிரியதர்ஷினி, காஞ்சிபுரம் எம்பி ஜி.செல்வம், அப்துல் மாலிக், தசரதன். க. தியாகராஜன், ஒன்றிய செயலாளர் சிற்றரசு, மோகன் தாஸ், உள்ளிட்ட ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து வழங்குகிறார்!

# ஆதிதிராவிடர் - பழங்குடியினருக்கு பல்வேறு நலத்திட்டங்கள்!


## சேலத்தில் — அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேச்சு!

சேலம்,ஏப்.17-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆதிதிராவிடர் மற்றும்

பழங்குடியினர் நலனில் அக்கறை கொண்டு பல்வேறு சிறப்பான

திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள் என்று சேலம் ஆத்தூரில் நடைபெற்ற சமத்துவ நாள் விழாவில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் 2,086 பயனாளிகளுக்கு ரூ.13.03 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசுகையில் தெரிவித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளான சமத்துவ நாளில் சென்னையில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி தொடங்கி வைத்ததை யொட்டி, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம், ஆத்தூரில் நடைபெற்ற சமத்துவ நாள் விழாவில் பல்வேறு துறைகளின் சார்பில் 2,086 பயனாளிகளுக்கு ரூ.13.03 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்ததாவது:

அனைவரின் வளர்ச்சி, அனைத்து தரப்பினரின் வளர்ச்சி தான் "திராவிட மாடல்" ஆட்சி என்பதில் உறுதியாக கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் , பட்டியல் மற்றும் பழங்குடியினர் முன்னேற்றத்திற்காக எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தி வருகிறார்கள். சேலம் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், 76,929 மாணாக்கர்களுக்கு ரூ.6.74 கோடி மதிப்பிலான கல்வி உதவித்தொகை, அரசு, அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 13,333 மாணாக்கர்களுக்கு ரூ.6.31 கோடி மதிப்பில் மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

தீண்டாமை கடைபிடிக்காத கிராமத்திற்கான பரிசுத்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம் வாழப்பாடி ஒன்றியத்தில் திருமனூர் ஊராட்சியும், அயோத்தியாபட்டிணம் ஒன்றியத்தில் வீராணம் ஊராட்சியும் தெரிவு செய்யப்பட்டு, ஊராட்சிகளுக்கும் தலா 10.00 இலட்சம் வீதம் ரூ.20.00 இலட்சம் பரிசுத்தொகை வழங்கப்பட்டுள்ளது. மத நல்லிணக்கத்துடன் வாழும் ஊராட்சிகளில் உள்ள சமத்துவ மயானம் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் வேப்பநத்தம், தென்குமரி மற்றும் சார்வாய் ஆகிய 3 ஊராட்சிகள் தெரிவு செய்யப்பட்டு, தலா 10.00 இலட்சம் வீதம் ரூ.30.00 இலட்சம் பரிசுத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோருக்கான தீருதவி, அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளில் மற்றும் ஊராட்சிகளில் 75 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.8.56 இலட்சம் மதிப்பிலான தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அரசு ஆதிதிராவிடர் நலப்பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களின் விடுதிகளில் ரூ.88.85 இலட்சம் மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பட்டியல் மற்றும் பழங்குடியினரை தொழிற்முனைவோராக்க இந்தியாவிலேயே முன்னோடியாக அம்பேத்கர் தொழில் முன்னோடி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதேபோன்று இன்றைய தினம் நடைபெறும் இவ்விழாவில் சேலம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் வீட்டு மனைப்பட்டா, தையல் இயந்திரம், தீருதவித்தொகையும், தாட்கோ மூலமாக முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் சமூக பொருளாதார தொழில் முனைவு திட்டம், அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியத்தின் அடையாள அட்டை. நன்னிலம் மகளிர் நில உடைமை திட்டம், மகளிர் திட்டத்தின் மூலம் வாழ்வாதார கடனுதவிகளும், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில் புதிய மின்னணு குடும்ப அட்டைகள், பயிர்கடன், கால்நடை பராமரிப்பு கடன் வழங்கப்பட்டது.

வேளாண்மை துறையின் சார்பில் அட்மா திட்டம், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம், மாநில வேளாண் வளர்ச்சித்திட்டம், நுண்ணீர் பாசன திட்டம், பாரத பிரதமரின் நுண்ணீர் பாசன திட்டம், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் சார்பில் உழவர் அட்டை, வேளாண் மற்றும் பொறியியல் துறையின் சார்பில் மானியத்தில் வேளாண் இயந்திரங்கள், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் தேசிய தோட்டக்கலை மிஷன், தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்ட ம், ஒரு சொட்டு அதிக பயிர் திட்டம், முன்னோடி வங்கியின் சார்பில் கல்வி கடனும் வழங்கப்பட்டது.

தொழிலாளர் நலத்துறையின் சார்பில் திருமண உதவித்தொகை, ஓய்வூதியம், மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடி திட்டம், பிரதம மந்திரி வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி சுகாதார பிரிவு நிரந்தர தூய்மைப்பணியாளர்களுக்கு சீருடை மற்றும் பணிப்பாதுகாப்பு உபகரணங்கள், ஊரக வளர்ச்சி துறையின் சார்பில் கலைஞர் கனவு இல்லம் திட்டம், குடும்ப நலன் மற்றும் சுகாதாரத்துறையின் சார்பில் மருத்துவ பெட்டகம் என பல்வேறு துறைகளின் சார்பில் 2,086 பயனாளிகளுக்கு ரூ.13.03 கோடி மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனில் அக்கறை கொண்ட முதலமைச்சராக நமது தமிழ்நாடு முதலமைச்சர் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்கள்.

முன்னதாக சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற சமத்துவ நாள் விழாவில் சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதனைத்தொடர்ந்து சமத்துவ நாள் விழாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமத்துவ விருந்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், ஆத்தூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி தா.பிரியதர்ஷினி, வேளாண்மை இணை இயக்குநர் ச.சிங்காரம், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் நா.ஜெயக்குமார், மாவட்ட பழங்குடியினர் நல அலுவலர் திருமதி சுகந்தி பரிமளம், மாவட்ட மேலாளர் (தாட்கோ) ராமதாஸ், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் சிவக்குமார், வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் இரா.குமரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர் பாரப்பட்டி சுரேஷ், ஆத்தூர் நகர்மன்ற தலைவர் திருமதி நிர்மலா பபிதா உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வட்டச் செயலாளர் கோ கண்ணன் தலைமையில் ! பகுதிச் செயலாளர் எஸ்.முரளி முன்னிலையில்!

# மயிலை 126வது வட்டத்தில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா!

## மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ திறந்து வைக்கிறார்!

சென்னை,ஏப்.17-

சென்னை தென்மேற்கு மாவட்ட மயிலை கிழக்கு பகுதி 126வது வட்ட கழக திமுக சார்பில் தண்ணீர் பந்தல் மற்றும் நீர் மோர் பந்தல் திறப்பு விழா நாள் 17.04.2025 வியாழன் மதியம் 12 மணி அளவில் மந்தவெளி வன்னியம்பதி வெங்கடகிருஷ்ணா சாலை மற்றும் சாந்தோம் தெடுஞ் சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர் பந்தல்களின் திறப்பு விழா நிகழ்ச்சிக்கு கோ. கண்ணன் வட்டச் செயலாளர் தலைமை ஏற்கிறார், முன்னிலை ஏற்பவர் எஸ் முரளி மயிலை கிழக்கு பகுதி செயலாளர், வருகை தந்து நீர் மோர் பந்தலை மாவட்டச் செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ. திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மாநில மாவட்ட நிர்வாகிகள், செயற்குழு, பொதுக் குழு ஊறுப்பின்கள், பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர்கள் மாவட்டபிரதி நிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டம், பகுதி, வட்ட அணிகளின்அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், 126 ஆவது வட்டக் கழக பாகப் பொறுப்பாளர்கள் , பாக உறுப்பினர்கள் கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள்அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்



சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 134 வது பிறந்த நாளை முன்னிட்டு கோடம்பாக்கம் பவர் ஹவுஸ் அருகில் உள்ள அண்ணல் அம்பேத்கர் திருவுருவச் சிலைக்கு சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி உறுதிமொழி ஏற்றனர். இதில் கோ.சு மணி கோடம்பாக்கம் சத்யா ந.மோ முரளி கே.எஸ். வெல்டிங் ராஜா, பி.மாரி, பி.ஜெயக்குமார், மு.செல்வகுமார், கார்த்திகா பாஸ்கர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### திருவொற்றியூர் கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில்

# சட்டமேதை பி.ஆர்.அம்பேத்கர் பிறந்தநாள் - திருவுருவப் படத்திற்கு மரியாதை!

## மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு செலுத்தினார்! குறிஞ்சி எஸ்.கணேசன் பங்கேற்பு!

சென்னை, ஏப்.17-

சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர், சி.எம்.டி.ஏ. உறுப்பினர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனையின் படி திருவொற்றியூர் கிழக்கு பகுதி அவைதலைவர் ஆர். சி.ஆசைதம்பி தலைமையில் திருவொற்றியூர் மாநகராட்சி மண்டல குழு தலைவர் கிழக்கு பகுதி செயலாளர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் சட்ட மாமேதை, அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 135வது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி சார்பில், தி.மு.க பகுதி கழக அலுவலகத்தில் டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப்படத்தை நிறுவி மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப் பட்டது.

இதில் சென்னை வடகிழக்கு மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ். கணேசன், கிழக்கு பகுதி துணைச் செயலாளர் எம். வி. குமார் , கே.பிரபாவதி பொருளாளர் இரா.குமரேசன் , வட்ட கழக செயலாளர் எஸ்.தமிழ்செல்வன், மாவட்ட பிரதிநிதி எஸ். பாஸ்கர், ஒய்.நந்திவர்மன், ஆர்.ரஜினி பாபு பழனிவேல், வட்ட கழக நிர்வாகிகள் தீபா, தாராபாணு, முரளி மனோகர், உசிலை வேந்தன், மாயாவி மோகன், ராஜேந்திரன், அரி, சுகுமார்,வடகிழக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் எம்.கோமளவல்லி,

மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவர் சாரதி பாலாஜி, துணை அமைப்பாளர் பால உமாபதி, மாவட்ட தொண்டரணி துணை தலைவர் சி.சரவணன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் டி. பி.பாலசுந்தரம், தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் விக்னேஷ், கிழக்குப் பகுதி இளைஞரணி அமைப்பாளர் பி.ஜி. அவினாஷ் துணை அமைப்பாளர் கே.மோகன்ராஜ், மகளர் அணி நிர்வாகிகள் எம்.பாத்திமா, ரூக்கு, ல்லி, வெண்ணிலா, சாந்தி, ஹேமா, சௌம்யா, அம்சா, சுந்தரி, 9வது வட்ட கழக செயல்வீரர் ஜோதி பிரியன், வெற்றி, கலையரசன், ஜெயச்சந்திரன், வெங்கடேசன் மற்றும் கழக தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### திருபெரும்புதூர் வடக்கு ஒன்றிய

# தி.மு.க. செயற்குழுக் கூட்டம் - நீர் மோர் பந்தல்!

## ஒன்றியச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி அறிக்கை!

காஞ்சிபுரம், ஏப். 17

திருபெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ். டி. கருணாநிதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருபெரும்புதூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. செயற்குழுக் கூட்டம் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன், ஆணைக்கிணங்க, இன்று (17.04.2025 வியாழக்கிழமை) காலை 10 மணி அளவில், சுங்குவார்சத்திரத்தில் உள்ள திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

மேலும் காலை 10 மணிக்கு மேல், சுங்குவார்சத்திரம் பஜார் பகுதியில், நீர் மோர் பந்தல் திறப்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் வருகின்ற ஏப்ரல் 19 அன்று கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் நமது மாவட்டத்தில் உள்ள குன்றத்தூர் பகுதிக்கு வருகை தர இருப்பதால் நமது ஒன்றியத்திலிருந்து 2000 க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மேற்கண்ட இந்த இரண்டு நிகழ்விலும் ஒன்றியத்துக்கு உட்பட்ட மாவட்டக் கழக, ஒன்றியக் கழக, வார்டுக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு திருபெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி கேட்டுக் கொண்டுள்ளார்.

### தி.மு.க. வர்த்தகர் அணி

# இராணிப்பேட்டை மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம் அறிவிப்பு!

இராணிப்பேட்டை மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட பி.தியாகராஜன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக வி.விஜயகுமார் (2/376, பிள்ளையார் கோவில் தெரு பின்புறம், நவ்லாக், காரை, புளியங்கண்ணு, இராணிப்பேட்டை - 632 404) அவர்கள் இராணிப்பேட்டை மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளராகவும்;

மாவட்ட துணை அமைப்பாளர்களாக ஏற்கனவே நியமிக்கப்பட்ட எஸ்.சக்கரவர்த்தி, தணிகைவேல் ஆகியோரை அவர்கள் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்து, அவர்களுக்குப் பதிலாக வி.பரசுராமன் (6/12, பிள்ளையார் கோவில் தெரு இராணிப்பேட்டை, இராணிப்பேட்டை மாவட்டம்) மற்றும் எம்.வி.அம்பேத்ராஜன் (16, ஈபி காலனி, வாலாஜாபேட்டை இராணிப்பேட்டை மாவட்டம் - 632 513) ஆகியோர் இராணிப்பேட்டை மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர்களாகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாவட்ட வர்த்தகர் அணி நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் :16.-04-2025.

காசி முத்துமாணிக்கம்
செயலாளர்,
தி.மு.க. வர்த்தகர் அணி



சென்னை வடக்கு மாவட்ட இலக்கிய அணி சார்பில் மாவட்டத் துணை அமைப்பாளர் ஒளி ஒலி ஆ.பாபு ஏற்பாட்டில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்தநாள் விழா மற்றும் கழக அரசின் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பகுதி செயலாளர் இரா.லட்சுமணன் ஆகியோர் முன்னிலையில் மகளிரணி பிராச்சாரக் குழு செயலாளர் சேலம் சுஜாதா சிறப்புரை ஆற்றினார். மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி சேகர் எம்.எல்.ஏ, பொதுமக்களுக்கு நலஉதவிகளை வழங்கினார். இலக்கிய அணி செயலாளர் வி.பி.கலைராஜன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், என்.மருதுகணேஷ், இரா.வெற்றிவீரன், சி. மணிகண்டன், வெ.சு.சத்யநாராயணன், ஏ.டி.மணி, வி.வி.ரமேஷ், எஸ்.எம்.பரசுராமன், ப.சோமசுந்தரமூர்த்தி, என்.அனிபா, ஆர்.டி.ராஜா, மற்றும் கலந்து கொண்டனர்.